1981 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கா காளிமுத்து : இல்லை.

மதுரை—கம்பம்-குமுளி —கோட்டயம்—நெடுஞ்சாலை.

*வினா எண். 534—திரு. ஆர். டி. கோபாலன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கம்பம், குமுளி, கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதுரை-கம்பம்-குமுளி-கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி-மதுரை-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனி சாலை அடங்கும்.

வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்கள்.

*வினா எண். 535—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் பேரூராட்சியில் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வரவில்லை. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் பேரூராட்சி எல்லைக்குள் 1979 ஆம் ஆண்டில் அதிக மழை வெள்ளம் காரணமாக சாலைகள், மற்றும் தெருக்களின் சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 8,36,000மும் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 75,000மும் ஆக மொத்தம் ரூ. 9,11,100 நிதி ஒதுக்கீடு கோரி தலைமைப் பொறியாளர், வெள்ள நிவாரணத் திட்டம் அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் செயற்

குறிப்பு அனுப்பப்பட்டது. மேலும் நிதி ஒதுக்கீடு இன்மையால் இந்த பேரூராட்சி மட்டுமன்றி வேறு முன்மொழி அனுப்பப் பட்ட எந்த பேரூராட்சிக்கும் கட்டிடங்களையோ சாலை களையோ சீர்செய்வதற்காக தலைமைப் பொறியாளரால் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

*வினா எண். 536—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமராவதி ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; (அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், கரூரில், அமராவதி ஆற்றின் குறுக்கே பழு தடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு திருவாளர்கள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இப் பணி 30–4–82 அன்று முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

திரு. எம். சின்னசாமி: தற்போதுள்ள இந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. ஆகவே புதுப் பாலம் கட்டிய வுடன் இந்தப் பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தற்போதுள்ள பாலம் $14\frac{2}{3}$ டன் எடையுள்ள வாகனங்களை மட்டுமே தாங்கக்கூடிய அளவிற்கு இருக்கிற காரணத்தினால்தான் 70 டன் எடை தாங்கக் கூடிய அளவிற்கு பாலம் ஒன்றை ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்குண்டான திட்டம் தீட்டப்பட்டு ஏற்கெனவே கட்டுமானக்கழகத்திற்கு கொடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டு விட்டன. இப்பணி 30–4–82-ல் முடிந்துவிடும்.

ஒன்றியப்பள்ளிகளிலுள்ள ஆயாக்கள் பதவி.

*வினா எண். 537—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —